DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE IV[th] ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
UDUMALPET

**Sessions CASE No : 126/2016**

Deposition of Witness for : **P.W.25**

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்தானம் | Calling | : தலைமைக்காவலர் |
| Father Name | : குமார் | Taluk | : திருப்பூர் |
| Age | : 43 | District | : திருப்பூர் |

எதிரி – 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of **13.03.2025**

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பூர் மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.02.2015 ம் தேதி தனிப்பிரிவு ஆய்வாளர் அவர்கள் உத்தரவின் பேரில் தாராபுரம் வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் அலங்கியம் காவல் நிலைய குற்ற எண். 64/2015 வழக்கில் தொடர்புடைய 8012386908, 9865974853 ஆகிய இரு எண்களுக்குண்டான 01.01.2015 முதல் 06.02.2015 வரையிலான அழைப்பு விவரங்கள் கேட்ட வேண்டுகோள் கடிதத்தினை பெற்று மேற்குறிப்பிட்ட எண்களுக்குண்டான ஏர்செல் நிறுவனத்திற்கு மெயில் அனுப்பினேன். ஏர்செல் நிறுவனத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற விவரங்களை தாராபுரம் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு மெயில் அனுப்பிவிட்டு, மேலும் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்தின் பேரில் மேற்குறிப்பிட்ட இரண்டு எண்களுக்குண்டான இன்கம்மிங் மற்றும் அவுட்கோயிங் விவரங்களை பார்த்து சொன்னேன். இது சம்பந்தமாக தாராபுரம் வட்ட காவல் ஆய்வாளரிடம் நடந்த விவரங்களை சொன்னேன்.

<u>**1**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி மொபைல் எண்கள் தொடர்பாக தாராபுரம் வட்ட காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். அந்த வேண்டுகோள் கடிதம் தாக்கல்

செய்யவில்லை என்றால் தெரியவில்லை. ஆனால் என்னுடைய கோப்பில் உள்ளது. ஏர்செல் நிறுவனத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. அந்த வேண்டுகோள் கடிதத்தில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை விவரங்கள் வேண்டும் என்ற விவரத்தை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். 21.03.2015 அன்று என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**2** மற்றும் **3**ம் எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தனதாக ஒப்புக்கொள்கிறார்கள்.

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-C.Rajalingom.
IVth Additional District and Sessions Judge,
Udumalpet.